# கால விளக்கம்

- இலக்கணத்தில் **காலம்** என்பது, ஒரு செயல் எப்பொழுது நடைபெறுகிறது என்பதைக் காட்டும் இலக்கணக் கூறு ஆகும்
- ஒரு செயல் பேசப்படும் நேரத்துக்கு முன்னரா, அதே நேரத்திலா அல்லது பின்னரா என்பதைக் குறித்துக் காட்டுவதே காலம்.
- தமிழ் இலக்கணத்தில் காலம், இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூன்று வகைப்படும்.
- பேசும் நேரத்துக்கு முன்னர் நிகழ்ந்தவற்றைக் குறிப்பது இறந்தகாலம்,
- அந்நேரத்தில் நடந்துகொண்டு இருப்பவற்றைக் குறிப்பது நிகழ்காலம்.
- பின்னர் நிகழ இருப்பவற்றைக் குறிப்பது எதிர்காலம்.

## காலத்தின் வகைகள்

காலம் **மூன்று** வகைப்படும். அவை, இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பனவாகும்.

- இறந்தகாலம்

செயல் நிகழ்ந்து முற்றுப் பெற்றதைக் குறிப்பது **இறந்தகாலம்** எனப்படும்.

(எ.கா) **உண்டான்**.

இது, உண்ணுதலாகிய செயல் நிகழ்ந்து முற்றுப் ( முடிவு) பெற்றதைக் குறிக்கின்றது.

• நிகழ்காலம்

செயல் தொடங்கி, முற்றுப் பெறாத நிலை **நிகழ்காலம்** ஆகும். செயல் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பது இதன் பொருளாகும்.

(எ.கா) **உண்கின்றான்**.

• எதிர்காலம்

செயல் தொடங்கப் பெறாத நிலை **எதிர்காலம்** எனப்படும். செயல் இனி நிகழ உள்ளது எனச் சுட்டுவது இதன் நிலையாகும்.

(எ.கா) **உண்பான்**